**ஆண் :** ஹே முத்து முத்தா
மொட்டு விட்ட வாச முள்ள
அட தொட்டு புட்டா தோஷமில்ல
வாடி புள்ள

**ஆண் :** தண்ணி கருத்துருச்சு
கண்ணு தவள சத்தம் கேட்டுருச்சு
ஊரும் உறங்கிருச்சு நாம ஒதுங்க
இடம் கெடச்சுருச்சு

**ஆண் :** தண்ணி கருத்துருச்சு
கண்ணு தவள சத்தம்
கேட்டுருச்சு

**ஆண் :** மெதுவா போடுது
தூறல் அடி மேலே தெளிக்குது
சாரல் மெதுவா போடுது தூறல்
அடி மேலே தெளிக்குது சாரல்

**ஆண் :** உடம்போ எனக்கு சூடா
இருக்கு சில்லுன்னுதான் நெஞ்சம்
நான் சேர்ந்துக்கவா கொஞ்சம்
மாதத்துக்கா பஞ்சம் நீ மல்லிய
பூ மஞ்சம்

**ஆண் :** ரகசிய உறவிருக்கு
நமக்கு யே கிட்ட கிட்ட வந்து
கட்டிக்கடி அட்டைய போல்
சட்டுனு தான் ஒட்டிக்கடி

**ஆண் :** தண்ணி கருத்துருச்சு
கண்ணு தவள சத்தம்
கேட்டுருச்சு

**ஆண் :** தருசா கெடக்குது
பூமி அட இதுக்கா படைச்சான்
சாமி தருசா கெடக்குது பூமி
அட இதுக்கா படைச்சான் சாமி

**ஆண் :** நான் தான் மேகம்
உனக்கேன் தாகம் கொள்ளுதடி
தாபம் நான் கொஞ்சுவதா பாவம்
மிஞ்சுதடி மோகம் ஹே அஞ்சுதடி
தேகம்

**ஆண் :** வாலிப வயசிருக்கு
நமக்கு ஹே கொத்து கொத்தா
காச்சிருக்கும் தென்னங்கொல்லே
கொஞ்சி நின்னா குத்தமில்ல
வாடி புள்ள

**ஆண் :** தண்ணி கருத்துருச்சு
கண்ணு தவள சத்தம்
கேட்டுருச்சு

**ஆண் :** லேசா தொடத்தான்
மயக்கம் ஏன் ரோசாப்பூவே
உனக்கும் அதுவா அடங்கும்
அணைச்சா இளகும்

**ஆண் :** கண்டதனால் பித்தம்
நான் கொண்டதுதான் மிச்சம்
தந்திடவா முத்தம் அடி
வந்திடுமா சத்தம்

**ஆண் :** துடிக்கிற துடிப்பெதுக்கு
அதுக்கு யே காதும் காதும் வச்சது
போல் வாடி புள்ள கண்ணும்
கண்ணும் பேசுறப்போ பாஷை
இல்ல

**ஆண் :** தண்ணி கருத்துருச்சு
கண்ணு தவள சத்தம் கேட்டுருச்சு
ஊரும் உறங்கிருச்சு நாம ஒதுங்க
இடம் கெடச்சுருச்சு ஒதுங்க இடம்
கெடச்சுருச்சு ஒதுங்க இடம்
கெடச்சுருச்சு